Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்


New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.


| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 66 | உள்ளூர் - 07.03.2026 | சனி | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue 66 | வெளியூர் - 08.03.2026 | ஞாயிறு | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


| வீட்டில் அடிக்கடி சண்டை வருதா..? வாஸ்து பரிகாரம்! | சென்ட்ரல் பேங்க் – 275 காலியிடங்கள்! | தமிழ்நாட்டுக்கு ஜாக்பாட்: 4 புதிய ரயில்கள்? | நியமனத்தில் ஆசிரியர்களுக்கு சிறப்பு மதிப்பெண்! |
|---|---|---|---|



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை, ஆளுநர் மாளிகையில், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி சந்தித்து, மேற்குவங்க மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டதையொட்டி சால்வை அணிவித்து, அய்யன் திருவள்ளுவர் சிலையை வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

## திமுகவின் 5ஆண்டுகால ஆட்சியில் மக்களுக்கு செய்தது என்ன? வீடியோ வெளியீடு!



சென்னை, மார்ச். 07–

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் தேதி இன்னும் சில தினங்களில் அறிவிக்கப்பட இருக்கிறது. கடந்த 2021ஆம் ஆண்டு மே மாதம் திமுக தலைமையிலான அரசு பொறுப்பேற்று, இந்த ஐந்து வருடங்களில் தமிழ்நாட்டில் மேற்கொண்ட உள்கட்டமைப்பு, கொண்டுவந்த திட்டங்கள் உள்ளிட்டவற்றை உள்ளடக்கி ‘கடந்த ஐந்து ஆண்டுகளில் கட்டப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க கட்டுமானங்களில் காட்சி தொகுப்பு’ எனும் தலைப்பில் தமிழ்நாடு அரசு காணொளி ஒன்றை வெளியிட்டுள்ளது.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை, அண்ணா அறிவாலயத்தில், பேராசிரியர் க. அன்பழகன் நினைவு நாளையொட்டி அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின் போது, கழக பொருளாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கழக துணை பொதுச் செயலாளர்கள் – நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, ஆ.ராசா, சட்டமன்ற உறுப்பினர்கள் இ. பரந்தாமன், தாயகம் கவி, மரு. நா. எழிலன், கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, துணை அமைப்புச் செயலாளர் ஆஸ்டின், தலைமை நிலைய அலுவலகச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி எஸ். முருகன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே. சிற்றரசு மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## ஈரானில் 3 ஆயிரம் இலக்குகளில் துல்லிய தாக்குதல்; அமெரிக்க படை தகவல்!




ஈரான், மார்ச். 07–

ஈரானில் 3,000க்கும் மேற்பட்ட இலக்குகளை துல்லியமாக தாக்கி உள்ளோம் என அமெரிக்க படை மத்திய தலைமையகம் தெரிவித்துள்ளது.

மேற்கு ஆசிய நாடான ஈரானுக்கும், இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவுக்கும் இடையே கடந்த ஒரு வாரமாக போர் நீடிக்கிறது. அமெரிக்காவின் தாக்குதலில் ஈரான் தனது ராணுவம், கடற்படை மற்றும் முக்கிய தலைவர்களை இழந்து விட்டது. நிபந்தனையற்ற சரண் அடைவதை தவிர ஈரானுடன் எந்த ஒப்பந்தமும் இருக்காது என அதிபர் டிரம்ப் திட்டவட்டமாக தெரிவித்து உள்ளார்.

இந்நிலையில் ஈரானில் இலக்குகளை குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான வீடியோவை பகிர்ந்து, அமெரிக்க படை மத்திய தலைமையகம் கூறியிருப்பதாவது:

ஈரானில் அமெரிக்கப் படைகள் கடந்த ஒரு வாரமாக நடத்தி வந்த தாக்குதலில் 3,000க்கும் மேற்பட்ட இலக்குள் குறிவைக்கப்பட்டு துல்லியமாக அழிக்கப்பட்டன.

எங்கள் படைகள் தாக்குதல் நடத்தும் வேகத்தை குறைக்கவில்லை. தாக்குதல் நடத்தப்படுவது தொடர்கின்றன'' என தெரிவித்துள்ளது.

## விஜய் வீட்டுக்குள் அனுமதிக்க வேண்டும்; சங்கீதா!



சென்னை, மார்ச். 07–

நடிகர் விஜய் உடனான தனது திருமண பதிவை ரத்து செய்யக் கோரி அவரது மனைவி சங்கீதா நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இந்த மனு மீதான விசாரணை வரும் ஏப்ரல் மாதம் 20 ஆம் தேதி நடைபெறவுள்ளது. இப்படி இருக்கையில் இந்த வழக்கின் தீர்ப்பு வரும் வரை தான் தனது புகுந்த வீடான நீலாங்கரை வீட்டில் தங்க அனுமதி வேண்டும் எனவும், வழக்கு முடிந்து வேறு வீட்டிற்குச் செல்லும் வரை தன்னை நீலாங்கரை வீட்டில் தங்க விஜய் அனுமதிக்க வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கச் சொல்லி விஜய்யின் மனைவி சங்கீதா செங்கல்பட்டு நீதிமறத்தில் மனுதாக்கல் செய்துள்ளார். இது பலரது கவனத்தை ஈர்த்துள்ளது.

மேலும் அவரது புதிய மனுவில், “ பிரிட்டன் குடியுரிமையுடன் நான் லண்டனில் வசித்து வருவதால், எனக்கு சென்னையில் தனியாக வீடு எதுவும் இல்லை. விவாகரத்து கோரியுள்ளதால் தற்போது சென்னையில் வீடு இன்றி தவிக்கிறேன். மேலும் என்னை வீட்டிற்குள் அனுமதிக்க நடிகர் விஜய் மறுக்கிறார். அதேபோல் கோடி கோடியாக சம்பாதிக்கும் விஜய் எனக்கும் எனது குழந்தைகளுக்கும் சேரவேண்டிய நியாயமான ஜீவனாம்சத்தை வழங்க வேண்டும்'' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## மார்ச் 9 முதல்

# மீண்டும் கூடுகிறது நாடாளுமன்றம்!

## மக்களவைத் தலைவருக்கு எதிரான தீர்மானம்!



புதுடெல்லி, மார்ச். 07–

நடப்பு நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் இரண்டாம் கட்ட அமர்வு மார்ச் 9–ஆம் தேதி தொடங்கி ஏப்.2 வரை நடைபெறவுள்ளது.

மக்களவைத் தலைவரை பதவி நீக்கக் கோரும் எதிர்க்கட்சிகளின் தீர்மானம் மார்ச் 9–இல் தாக்கல் செய்யப்படவுள்ளது. எனவே, அவை அலுவல்களில் தவறாமல் பங்கேற்க வேண்டும் என்று தத்தமது எம்.பி.க்களுக்கு ஆளும் பாஜகவும், எதிர்க்கட்சியான காங்கிரஸும் கொறடா உத்தரவு பிறப்பித்துள்ளன.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் கடந்த ஜன. 28–ஆம் தேதி குடியரசுத் தலைவர் உரையுடன் தொடங்கியது. கடந்த பிப்.13–ஆம் தேதியுடன் நிறைவடைந்த முதல்கட்ட அமர்வில் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டன.

முன்னாள் ராணுவ தலைமைத் தளபதி எம்.எம். நரவணேயின் வெளியிடப்படாத சுயசரிதை நூல் சர்ச்சை, இந்திய–அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம், எப்ஸ்டீன் ஆவணங்கள் விவகாரம் எனப் பல்வேறு பிரச்னைகளை எழுப்பி, மத்திய அரசுடன் மோதல்போக்கை கடைப்பிடித்தன.

அவைத் தலைவருக்கு எதிராக தீர்மானம்:

கடந்த பிப். 3–ஆம் தேதி மக்களவையில் காகிதங்களைக் கிழித்து, அவைத் தலைவர் இருக்கையை நோக்கி வீசியதற்காக எதிர்க்கட்சி எம்.பிக்கள் 8 பேர் இடைநீக்கம் செய்யப்பட்டனர். மறுநாள், குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது பிரதமர் மோடி உரையாற்றவிருந்தநிலையில், எதிர்க்கட்சிகளின் கடும் அமளியால் அவரது உரை தவிர்க்கப்பட்டது. பிரதமருக்கு எதிராக ‘எதிர்பாராத செயலில்’ ஈடுபட காங்கிரஸ் எம்.பி.க்கள் திட்டமிட்டிருந்ததாகவும், எனவே, அவைக்கு வர வேண்டாம் என பிரதமரிடம் கேட்டுக் கொண்டதாகவும் மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா தெரிவித்த கருத்துகள் பரபரப்பை ஏற்படுத்தின.

இதையடுத்து, ஓம் பிர்லா முற்றிலும் பாரபட்சத்துடன் செயல்படுவதாகக் குற்றஞ்சாட்டி, அவரைப் பதவி நீக்கம் செய்யக் கோரி தீர்மானம் கொண்டுவர காங்கிரஸ், திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தரப்பில் நோட்டீஸ் அளிக்கப்பட்டது.

**மார்ச் 9–இல் தீர்மானம்:**

இந்தச் சூழலில் நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் இரண்டாம் கட்ட அமர்வு மார்ச் 9–இல் தொடங்கி ஏப்.2 வரை நடைபெறவுள்ளது. முதல் நாள் அலுவலில் மக்களவைத் தலைவருக்கு எதிரான தீர்மானம் பட்டியலிடப்பட்டுள்ளது. இதையொட்டி, அவை அலுவல்களில் தவறாமல் பங்கேற்கும்படி, தத்தமது எம்.பி.க்களுக்கு பாஜகவும், காங்கிரஸும் கொறடா உத்தரவு பிறப்பித்துள்ளன. அரசமைப்புச் சட்டத்தின் 94சி பிரிவின்கீழ், பெரும்பான்மை வாக்குகளுடன் தீர்மானம் நிறைவேற்றி மக்களவைத் தலைவரை பதவிநீக்கம் செய்ய முடியும்.

கடந்த காலங்களில் மக்களவைத் தலைவர்களாக இருந்த ஜி.வி.மாவலங்கர் (1954), ஹுக்கம் சிங் (1966), பல்ராம் ஜாக்கர் (1987) ஆகியோர் இதுபோல் நம்பிக்கையில்லா தீர்மானத்தை எதிர்கொண்டனர். ஆனால், எந்தத் தீர்மானமும் வெற்றி பெறவில்லை. தற்போது எம்.பி.க்கள் பலத்தின் அடிப்படையில், ஓம் பிர்லாவுக்கு எதிரான தீர்மானமும் தோல்வியையே சந்திக்கும்.

**‘மேற்காசிய நிலவரம் குறித்து விவாதிக்க வேண்டும்’:**

நாடாளுமன்ற இரண்டாம் கட்ட அமர்வில், மேற்காசிய நிலவரம் குறித்து விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து கட்சியின் பொதுச் செயலர் ஜெய்ராம் ரமேஷ் கூறுகையில், ‘இந்தியாவின் உலகளாவிய நிலைப்பாடு, இப்போது இருப்பதுபோல் ஒருபோதும் பலவீனமாக இருந்ததில்லை; சர்வதேச அளவில் பிரதமர் மோடி அரசு பலம் குன்றி, சுருங்கிவிட்டது. அமெரிக்காவுக்கு மட்டுமன்றி இஸ்ரேலுக்கும் பணிந்து செல்லும் நிலைக்கு இந்தியாவை தள்ளிவிட்டனர்.

இந்தியா மீதான அமெரிக்காவின் தொடர் மிரட்டல், மேற்காசியாவில் நீடிக்கும் போர், ஈரானில் அரசியல்–ராணுவ தலைவர்கள் கொலை, வளைகுடா நாடுகளில் 1 கோடி இந்தியர்களின் பாதுகாப்பு, வாழ்வாதாரத்துக்கு எழுந்துள்ள அச்சுறுத்தல் என பல்வேறு பிரச்னைகள் நிலவுகின்றன. எனவே, மேற்காசிய நிலவரம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட வேண்டும்’ என்று வலியுறுத்தினார்.

இந்தியாவில் எதிர்க்கட்சித் தலைவர்களை அவமதிக்க எந்த முயற்சியையும் விட்டுவைக்காத பிரதமர் மோடி, அமெரிக்க அதிபர் டிரம்ப்பில் நடவடிக்கைகள் குறித்து வாய்திறப்பதில்லை என்றும் ஜெய்ராம் ரமேஷ் விமர்சித்தார்.

## தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தல் பணிகளுக்காக துணை ராணுவம் வருகை!!



சென்னை , மார்ச். 07–

தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தல் பணிகளுக்காக விசாகப்பட்டினத்தில் இருந்து துணை ராணுவம் வருகை புரிந்துள்ளனர். 70 பேர் கொண்ட சி.ஆர்.பி.எஃப் வீரர்கள் சென்னை கே.கே.நகரில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். சென்னை வண்ணாரப்பேட்டை, கிண்டியில் துணை ராணுவத்தினர் 131 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

## மார்ச் 15 (அ) 16-ல் தேர்தல் தேதி அறிவிப்பு?



சென்னை , மார்ச். 07–

தமிழ்நாடு உள்ளிட்ட 5 மாநில தேர்தல் தேதி மார்ச் 15 அல்லது 16ம் தேதி அறிவிக்கப்பட வாய்ப்பு உள்ளது. தமிழ்நாட்டைத் தொடர்ந்து கேரளாவில் தனது ஆய்வை இன்று முடிக்கும் தேர்தல் ஆணையர்கள், நாளை (மார்ச் 8) முதல் 3 நாட்களுக்கு மேற்குவங்கத்தில் தேர்தல் ஏற்பாடுகள் குறித்து ஆய்வு செய்கின்றனர். மேற்கு வங்கத்தில் 5 முதல் 7 கட்டங்களாகவும், மற்ற 4 மாநிலங்களில் ஒரே கட்டமாகவும் தேர்தலை நடத்த தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளது.

# தலையங்கம்

மதுரை மணி
சனிக்கிழமை 07.03.2026
விசுவாவசு தமிழ் வருடம்
மாசி மாதம் 23 -ம் தேதி

## சாமானிய மக்களுக்கு நிம்மதி..! கச்சா எண்ணெய், கேஸ் பற்றாக்குறை இல்லை..!




மேற்கு ஆசியாவில் நிலவி வரும் போர் சூழ்நிலையால் எரிவாயு, கச்சா எண்ணெய் எரிசக்தி விநியோகத்தில் பாதிப்பு ஏற்படக்கூடும் என்ற கூறப்படுகிறது.. இந்த சூழலில், இந்தியாவுக்கு மாற்று எரிசக்தி ஆதாரங்களை வழங்க ஆஸ்திரேலியா மற்றும் கனடா நாடுகள் எரிவாயு விற்க முன்வந்துள்ளதாக அரசுத் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன..

இந்தியாவுக்கு தற்போது தினமும் சுமார் 195 மில்லியன் மெட்ரிக் ஸ்டாண்டர்ட் கியூபிக் மீட்டர் (mmscmd) அளவில் எரிவாயு இறக்குமதி செய்யப்படுகிறது. இதில் கத்தார் மட்டும் தினமும் 60 mmscmd அளவு எரிவாயு வழங்குகிறது. மேற்கு ஆசியப் பகுதியில் பதற்றம் அதிகரித்துள்ளதால், இந்திய அரசு தற்போது எரிவாயு வாங்க மாற்று சந்தைகளை தேடும் பணியில் ஈடுபட்டு வருகிறது.

மேலும், இந்தியா தற்போது முக்கிய எண்ணெய் உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, கச்சா எண்ணெய் மற்றும் எல்பிஜி (Liquefied Petroleum Gas) வாங்குவதற்கான முயற்சியில் உள்ளது. இதற்காக இந்திய அரசு, சர்வதேச எரிசக்தி நிறுவனம் (IEA) மற்றும் பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு (OPEC) ஆகிய அமைப்புகளுடனும் ஆலோசனையில் ஈடுபட்டுள்ளது. மேலும், கப்பல்களுக்கு காப்பீடு பெறுவதற்காக இந்தியா அமெரிக்கா உடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

**ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் அமெரிக்காவுடன் புதிய ஒப்பந்தம்:**

எரிசக்தி ஆதாரங்களை பல்வேறு நாடுகளிலிருந்து பெறும் நோக்கில், இந்தியா சமீபத்தில் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் புதிய ஒப்பந்தங்களையும் கையெழுத்திட்டுள்ளது.

அரசுத் தகவல் வட்டாரங்கள் கூறுவதாவது, இந்தியா தினமும் இரண்டு முறை எரிசக்தி நிலைமையை மதிப்பாய்வு செய்து வருகிறது. தற்போது இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பு நிலைமை மிகவும் வசதியான நிலையில் உள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்தியாவின் கையிருப்பு நிலையும் போதுமான அளவில் உள்ளது. தினமும் புதிய கையிருப்புகள் சேர்க்கப்பட்டு வருவதால் எந்தவித சிக்கலும் இல்லை என்றும் அதிகாரிகள் கூறினர்.

**உலகளவில் எரிபொருள் பற்றாக்குறை இல்லை**

உலகளவில் எல்.பி.ஜி, எல்.என்.ஜி மற்றும் கச்சா எண்ணெய் பற்றாக்குறை தற்போது இல்லை என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.. இந்தியா மற்ற எரிசக்தி வழங்குநர்களுடனும் தொடர்ந்து தொடர்பில் இருந்து வருகிறது.

மேற்கு ஆசியாவில் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில், இந்தியாவிடம் மொத்தமாக 8 வாரங்களுக்கு போதுமான கச்சா எண்ணெய் மற்றும் பெட்ரோலிய தயாரிப்புகள் கையிருப்பில் உள்ளதாகவும் அரசு வட்டாரங்கள் செவ்வாய்க்கிழமை தெரிவித்தன. இதில் இந்தியாவின் மூலதன எண்ணெய் கையிருப்புகளும் அடங்கும்.

மேலும், இந்தியா இறக்குமதி செய்யும் கச்சா எண்ணெயில் சுமார் 40 சதவீதம் மட்டுமே ஹார்முஸ் வழியாக வருகிறது. மீதமுள்ள 60 சதவீதம் மற்ற வழிகளிலிருந்து வருகிறது. இதனால் அந்த பகுதியில் ஏற்படும் பிரச்சினைகள் இந்தியாவுக்கு பெரிதாக பாதிப்பை ஏற்படுத்தாது என்று கூறப்படுகிறது.

**நிலைமையை தீவிரமாக கண்காணிக்கும் இந்தியா**


மேற்கு ஆசியாவில் உருவாகி வரும் சூழ்நிலையை இந்தியா உன்னிப்பாக கண்காணித்து வருகிறது. இருப்பினும், போதுமான கையிருப்பும் பல்வேறு நாடுகளிலிருந்து எரிசக்தி வாங்கும் ஏற்பாடுகளும் இருப்பதால், விநியோகத்தில் ஏற்படக்கூடிய சிக்கல்களை இந்தியா சமாளிக்க தயாராக உள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்போது இந்தியாவிடம் சுமார் 25 நாட்களுக்கு போதுமான கச்சா எண்ணெய் கையிருப்பு உள்ளது. இதற்கு கூடுதலாக 25 நாட்களுக்கு போதுமான பெட்ரோல் மற்றும் டீசல் கையிருப்பும் உள்ளது.

இதனால், மொத்தமாக இந்தியாவிடம் சுமார் 8 வாரங்களுக்கு போதுமான கச்சா எண்ணெய் மற்றும் பெட்ரோலிய தயாரிப்புகள் கையிருப்பில் உள்ளன. குறுகிய காலத்தில் விநியோகத்தில் இடையூறு ஏற்பட்டாலும், நாட்டின் எரிசக்தி பாதுகாப்பு உறுதியாக இருக்கும்

மேலும், இந்தியா முன்பு செய்யப்பட்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில் ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெயை தொடர்ந்து இறக்குமதி செய்து வருகிறது. எல்.பி.ஜி, எல். என்.ஜி விநியோகத்திலும் இந்தியா தற்போது சீரான மற்றும் பாதுகாப்பான நிலையில் உள்ளது

உலகளாவிய எரிசக்தி சந்தையின் நிலைமை அரசு தொடர்ந்து கண்காணித்து வருகிறது. இந்தியாவுக்கு தேவையான எரிபொருள் விநியோகம் தடையின்றி கிடைக்க வேண்டும் என்பதற்காக அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாக கூறப்படுகிறது.



நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் ஊராட்சி ஒன்றியம் அனைபாளையம் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

## கேஸ் சிலிண்டர் பயனர்களுக்கு நிவாரணம்.. மத்திய அரசு அதிரடி உத்தரவு அமல்..!

புதுடெல்லி, மார்ச். 07–

வீட்டில் கேஸ் சிலிண்டர்களைப் பயன்படுத்துபவர்களுக்கு மத்திய அரசு ஒரு பெரிய நற்செய்தியை வழங்கியுள்ளது. வீட்டு உபயோகத்திற்காகப் பயன்படுத்தப்படும் எல்பிஜி எரிவாயு சிலிண்டர்களின் பற்றாக்குறையை நீக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் ஒரு பகுதியாக, நுகர்வோருக்கு சிலிண்டர்களை தடையின்றி வழங்க எரிவாயு விநியோக நிறுவனங்களுக்கு வெள்ளிக்கிழமை முக்கிய அறிவுறுத்தல்களை வெளியிட்டது. அதாவது, எரிவாயு நிறுவனங்களுக்கு பல கட்டுப்பாடுகளை விதிக்க முடிவு செய்துள்ளது.

இனிமேல், எரிவாயு நிறுவனங்கள் உள்நாட்டு நுகர்வோருக்கு சிலிண்டர்களை விநியோகிப்பதில் அதிக முன்னுரிமை அளிக்க வேண்டும். வணிக, தொழில்துறை மற்றும் பெட்ரோ கெமிக்கல் நோக்கங்களுக்கான எரிவாயு விநியோகத்தில் சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

ஈரான்–இஸ்ரேல் போர் எரிவாயு இறக்குமதியை சீர்குலைத்து வருகிறது. இது வெளிநாடுகளில் இருந்து இந்தியாவிற்கு எரிவாயு கொண்டு செல்வதைத் தடுக்கிறது. போர் தொடர்ந்து நீடிப்பதால், இன்னும் சில நாட்கள் தொடர்ந்தால் எரிவாயு போக்குவரத்து முடங்கும் அபாயம் உள்ளது. இதனால் எல்பிஜி பற்றாக்குறை ஏற்படக்கூடும் என்றும் விலைகள் அதிகரிக்கக்கூடும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த உத்தரவில், மக்கள் எந்த சிரமத்தையும் சந்திக்காத வகையில், உள்நாட்டு தேவைகளை வழங்கும் சிலிண்டர்களுக்கு முன்னுரிமை அளிக்குமாறு ஐஓசிஎல், பிபிசிஎல் மற்றும் ஹெச்பிசிஎல் நிறுவனங்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மறு உத்தரவு வரும் வரை இவை அமலில் இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. இந்த உத்தரவுகள் பெட்ரோலிய பொருட்கள் ஆணை 1999 இன் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ளன. பொது நலன் மற்றும் நுகர்வோரின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவுகள் உடனடியாக அமலுக்கு வரும் என்று உத்தரவுகளில் கூறப்பட்டுள்ளது.

நாட்டில் எல்பிஜி எரிவாயு விநியோகத்தை அதிகரிக்க மத்திய அரசு ஒரு முக்கிய முடிவை எடுத்துள்ளது. அனைத்து சுத்திகரிப்பு நிலையங்களும் அதிகபட்ச அளவில் புரோபேன்–பியூட்டேனில் இருந்து எல்பிஜியை உற்பத்தி செய்ய உத்தரவிட்டுள்ளது. பெட்ரோகெமிக்கல் பொருட்களில் புரோபேன்–பியூட்டேனைப் பயன்படுத்துவதை தடை செய்துள்ளது. அரசு எண்ணெய் நிறுவனங்கள் மட்டுமே எல்பிஜி வழங்க உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவுகள் மீறப்பட்டால் அத்தியாவசிய பொருட்கள் சட்டத்தின் கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெளிவுபடுத்தியுள்ளது. இதற்கிடையில், சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்து வருகிறது. இது எரிவாயு விலையில் தாக்கத்தை ஏற்படுத்தும். எரிவாயு விலைகள் கச்சா எண்ணெய் விலையைப் பொறுத்தது. ஈரானில் இருந்து கச்சா எண்ணெய் அதிகளவில் இறக்குமதி செய்யப்படுகிறது. இதன் காரணமாக, எரிவாயு விலைகள் விரைவில் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இது நடந்தால், அது சாமானிய மக்களுக்கு சுமையாக மாறும். மத்திய அரசு தடுப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

## சிக்னிஃபை: ஒரு வாட்டிற்கு 150 லுமன்ஸ் செயல்திறனுடன் பிலிப்ஸ் அல்ட்ரா ஷைன் விளக்குகள் அறிமுகம்!

சென்னை , மார்ச். 07–

மின்விளக்கு துறையில் உலகின் முன்னணி நிறுவனமான சிக்னிஃபை (Signify), ஒரு வாட்டிற்கு 150 லுமன்ஸ் செயல்திறன் வழங்கும் அடுத்த தலைமுறை 'பிலிப்ஸ் அல்ட்ராஷைன்' (Philips UltraShine) டவுன்லைட் வரிசையை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த புதிய வரிசை, நவீன வீடுகள், சில்லறை விற்பனை நிலையங்கள் மற்றும் வணிக வளாகங்களுக்கான அதிக பிரகாசத்தையும் மின்சார சேமிப்பையும் ஒருங்கிணைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த அறிமுகம் குறித்து சிக்னிஃபை நிறுவனத்தின் கிரேட்டர் இந்தியா நுகர்வோர் வணிகப் பிரிவுத் தலைவர் சி. அருண் குமார் கூறுகையில், "பிலிப்ஸ் அல்ட்ராஷைன் வரிசை மின்விளக்குத் துறையில் செயல்திறனுக்கான புதிய அளவுகோலை நிர்ணயிக்கிறது. ஒரு வாட்டிற்கு 150 லுமன்ஸ் செயல்திறன் மூலம் அதிக பிரகாசத்தையும், சிக்கனமான மின்சார பயன்பாட்டையும் வழங்கி நவீன டவுன்லைட்டிங் அனுபவத்தை அடுத்த நிலைக்கு கொண்டு செல்கிறது," என்றார்.



எக்ஸ்டெர்னல் டிரைவர் தொழில்நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்ட இந்த வரிசை 10W, 15W, 22W ஆகிய மாடல்களில் 150 லுமன்ஸ் / வாட் செயல்திறனையும், 5W மாடலில் 120 லுமன்ஸ்/வாட் செயல்திறனையும் வழங்குகிறது. வட்ட மற்றும் சதுர வடிவங்களில், வார்ம் ஒயிட், நேச்சுரல் ஒயிட், கூல் டே லைட் வண்ணங்களில் கிடைக்கும் இந்த விளக்குகள் 2 ஆண்டு உத்தரவாதத்துடன், Signify DigiShield ஆப் பதிவு மூலம் கூடுதல் 2 ஆண்டு உத்தரவாதத்தையும் வழங்குகின்றன.

## WD நிறுவனத்தின் கிரியேட்டர் ஸ்டோரேஜ் தயாரிப்புகள் இனி GDRIVE பிராண்டின் கீழ்

சென்னை , மார்ச் 07–

WD நிறுவனம் தனது புரொபஷனல் கன்டென்ட் கிரியேட்டர் ஸ்டோரேஜ் தயாரிப்புகள் அனைத்தும் இனி GDRIVE என்கிற ஒரே பிராண்டின் கீழ் கொண்டு வருவதாக தெரிவித்துள்ளது. இதன் மூலம் முன்பு SanDisk Profes–sional என்ற பெயரில் இருந்த டெஸ்க்டாப் டிரைவ்ஸ், போர்ட்டபிள் டிரைவ்ஸ் மற்றும் மல்டி–பே RAID ஸ்டோரேஜ் தயாரிப்புகள் அனைத்தும் இனி GDRIVE பெயரில் கிடைக்கும். இந்த தயாரிப்புகள் ஃபோட்டோகிராபி, வீடியோ தயாரிப்பு, கிராஃபிக் டிசைன் மற்றும் ஆடியோ இன்ஜினியரிங் போன்ற துறைகளில் உள்ள கிரியேட்டிவ் புரொபஷனல்களின் தேவைகளுக்காக வடிவமைக்கப்பட்டவை.



இந்த மாற்றம் குறித்து WD நிறுவனத்தின் ப்ராடக்ட் மேனேஜ்மென்ட் இயக்குனர் டேரின் புளிக் கூறுகையில், GDRIVE பிராண்ட் பல ஆண்டுகளாக கிரியேட்டர்ஸ் மத்தியில் நம்பகமான மற்றும் அதிவேகமான ஸ்டோரேஜ் தீர்வுகளுக்கான அடையாளமாக உள்ளது என்றார். அனைத்து கிரியேட்டர் ஸ்டோரேஜ் தயாரிப்புகளையும் இந்த ஒரே பிராண்டின் கீழ் ஒருங்கிணைப்பதன் மூலம், WD நிறுவனத்தின் மேம்பட்ட தொழில்நுட்பத்துடன் கூடிய மேலும் பல நம்பகமான தயாரிப்புகளை கிரியேட்டர்களுக்கு வழங்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

புதிய GDRIVE வரிசையில் GDRIVE ArmorATD போர்ட்டபிள் டிரைவ், அதிக கொள்ளளவு கொண்ட GDRIVE டெஸ்க்டாப் டிரைவ், GDRIVE PROJ–ECT மற்றும் G–RAID PROJECT 2 போன்ற உயர் செயல்திறன் கொண்ட ஸ்டோரேஜ் தீர்வுகள் இடம்பெறுகின்றன. மேலும் G–RAID SHUTTLE 4 மற்றும் SHUTTLE 8 போன்ற பல பே கொண்ட ஸ்டோரேஜ் அமைப்புகளும் இதில் அடங்கும். தற்போது SanDisk Profes–sional பெயரில் உள்ள தயாரிப்புகள் இந்த மாத இறுதிக்குள் GDRIVE பிராண்டுக்கு மாற்றப்படும் என்றும் நிறுவனம் தெரிவித்துள்ளது.

## AYDA Awards 202526 தேசிய இறுதியில் நிப்பான் பெயிண்ட் இந்தியா வெற்றியாளர்களை கௌரவித்தது

சென்னை, மார்ச். 07–

ஆசியா பசிபிக் பிராந்தியத்தின் முன்னணி பெயிண்ட் மற்றும் கோட்டிங்ஸ் உற்பத்தியாளரான நிப்பான் பெயிண்ட் இந்தியா, சென்னையில் நடைபெற்ற AYDA Awards 202526 தேசிய இறுதிப் போட்டியில் வெற்றியாளர்களை அறிவித்தது. ஆர்கிடெக்சர் பிரிவில் மைசூருவில் உள்ள வாடியார் சென்டர் ஃபார் ஆர்கிடெக்சர் மாணவி ஸிவானி திரிசலா தேசிய தங்க விருதைப் பெற்றார். இன்டீரியர் டிசைன் பிரிவில் சென்னை அகாடமி ஆப் ஆர்கிடெக்சர் அண்ட் டிசைன் மாணவர் ஜீஷ்ணு




கே. தேசிய தங்க விருதை வென்றார்.

இந்த நிகழ்வு குறித்து நிப்பான் பெயிண்ட் இந்தியாவின் டெக்கரேட்டிவ் கோட்டிங்ஸ் பிசினஸ் தலைவர் மார்க் டைட்டஸ் கூறுகையில், AYDA போட்டி இந்தியா முழுவதும் உள்ள இளம் வடிவமைப்பாளர்கள் திறமைகளை வெளிக்கொணரும் முக்கிய தளமாக வளர்ந்துள்ளது தெரிவித்தார். மாணவர்கள் சமூக, கலாச்சாரம் மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த சவால்களுக்கு புதுமையான தீர்வுகளை உருவாக்க இந்த தளம் ஊக்குவித்து வருவதாகவும் அவர் கூறினார்.

இந்த ஆண்டின் தலைப்பு "Converge: Crafting Cultur–al Legacies" ஆகும். நாட்டின் பல பகுதிகளில் இருந்து கிடைத்த 670–க்கும் மேற்பட்ட பதிவுகளிலிருந்து 24 மாணவர்கள் இறுதிக்குத் தேர்வு செய்யப்பட்டனர். ஆர்கிடெக்சர் மற்றும் இன்டீரியர் டிசைன் பிரிவுகளில் தேசிய தங்க விருது பெற்றவர்களுக்கு தலா ரூ.50,000 மற்றும் வெள்ளி விருது பெற்றவர்களுக்கு தலா ரூ.25,000 பண பரிசு வழங்கப்பட்டது.


## ரியல்மி C83 5G: 7000mAh பேட்டரி, 144Hz டிஸ்ப்ளே – ₹13,499 முதல்!

கோயம்புத்தூர் , மார்ச். 07–

இந்திய இளைஞர்களின் ஃபேவரைட் ஸ்மார்ட்போன் பிராண்டான ரியல்மி தனது C–சீரிஸ் வரிசையில் புதியதாக ரியல்மி C83 5G மாடலை அறிமுகப்படுத்தியுள்ளது. நாள் முழுவதும் பயன்படுத்தும் பயனர்களுக்காக உருவாக்கப்பட்ட இந்த போன், செக்மெண்டிலேயே மிகப்பெரிய 7000mAh டைட்டன் பேட்டரி, 144Hz அல்ட்ரா பிரைட் 6.7 இன்ச் டிஸ்ப்ளே மற்றும் 4 ஆண்டுகள் வரை ஸ்மூத் பெர்ஃபார்மென்ஸ் வழங்கும் திறனுடன் வருகிறது. மேலும் 15W PD / DCP சார்ஜிங் மற்றும் 5W ரிவர்ஸ் சார்ஜிங் வசதிகளும் இதில் உள்ளன.




இந்த ஸ்மார்ட்போனின் இதயமாக மீடியாடெக் டைமென்சிட்டி 6300 (6nm) 5G சிப்செட் செயல்படுகிறது. இது 4GB / 6GB LPDDR4X ரேம் மற்றும் 64GB / 128GB ஸ்டோரேஜ் ஆப்ஷன்களுடன் கிடைக்கிறது; மேலும் டைனமிக் ரேம் எக்ஸ்பான்ஷன் மூலம் 18GB வரை ரேம் மற்றும் OTG மூலம் 2TB வரை ஸ்டோரேஜ் விரிவாக்க வசதியும் உள்ளது. 144Hz அடாப்டிவ் ரெஃப்ரெஷ் ரேட் டிஸ்ப்ளே, AI அவுட்டோர் மோட் மற்றும் 5334mm VC கூலிங் சிஸ்டம் ஆகியவை வேகமான மற்றும் மென்மையான பயன்பாட்டை உறுதி செய்கின்றன. 13MP AI ரியர் கேமரா, 5MP செல்ஃபி கேமரா, IP64 டஸ்ட் & வாட்டர் ரெசிஸ்டன்ஸ், மிலிட்டரி–கிரேடு ஷாக் ரெசிஸ்டன்ஸ் மற்றும் 300% சூப்பர் வால்யூம் போன்ற அம்சங்களுடன் ரியல்மி C83 5G வருகிறது. ப்ளூமிங் பர்பிள் மற்றும் ஸ்ப்ரெளட்டிங் கிரீன் நிறங்களில் கிடைக்கும் இந்த போன் ₹13,499 ஆரம்ப விலையில் மார்ச் 7, 2026 முதல் Flipkart, realme.com மற்றும் முக்கிய ரீடெயில் ஸ்டோர்களில் விற்பனைக்கு கிடைக்கும்.



## வீட்டில் அடிக்கடி சண்டை வருதா..? வாஸ்து படி இந்த ஒரு விஷயத்தை செய்தால் போதும்..!




பெரிய காரணமே இல்லாமல் வீட்டில் அடிக்கடி சண்டைகள் நடப்பது வழக்கம். கணவன் மனைவி ஒருவருக்கொருவர் சரியாகப் பேசாமல் இருப்பது, குடும்ப உறுப்பினர்கள் சிறிய விஷயங்களுக்கு வாக்குவாதம் செய்வது போன்ற சூழ்நிலைகள் பல வீடுகளில் காணப்படுகின்றன. இதுபோன்ற சூழ்நிலைகளுக்கு பல காரணங்கள் இருக்கலாம். இருப்பினும், சில சந்தர்ப்பங்களில், வீட்டின் வாஸ்து குறைபாடுகள் குடும்பத்தில் அமைதியின்மையை ஏற்படுத்தும் என்று வாஸ்து சாஸ்திரம் கூறுகிறது. வீட்டில் எப்போதும் பதற்றம் இருந்தால், அது பெரியவர்களை மட்டுமல்ல, வீட்டில் உள்ள சிறு குழந்தைகளின் மனநிலையையும் பாதிக்கிறது. அவர்கள் எரிச்சலடையவும் பொறுமையின்மை காட்டவும் தொடங்குகிறார்கள். அதனால்தான் வாஸ்து சாஸ்திரத்தின்படி, வீட்டில் அமைதியையும் நேர்மறையான சூழ்நிலையையும் பராமரிக்க சில விஷயங்களை கவனமாகப் பின்பற்றுவது நல்லது என்று கூறப்படுகிறது.

வாஸ்து சாஸ்திரத்தின்படி, வீட்டில் உள்ள ஒவ்வொரு பொருளும் நம் வாழ்க்கையில் நேர்மறை அல்லது எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்துவதாக நம்பப்படுகிறது. குறிப்பாக திசைகள் மிகவும் முக்கியம். எனவே, வீட்டில் பொருட்களை சரியான திசையில் வைப்பது நல்ல ஆற்றலின் ஓட்டத்தை அதிகரிக்கும் என்று வாஸ்து நிபுணர்கள் கூறுகிறார்கள். இப்போது வாஸ்துவின்படி பின்பற்ற வேண்டிய சில முக்கியமான வழிமுறைகளை அறிந்து கொள்வோம்.

**பூஜை அறை**

வாஸ்து சாஸ்திரத்தின்படி, வீட்டில் பூஜை அறை வடகிழக்கு திசையில் இருப்பது எப்போதும் சிறந்தது. நீங்கள் பூஜை செய்யும்போது, கிழக்கு அல்லது மேற்கு நோக்கி இருக்க வேண்டும். மேலும், பூஜை இடம் எப்போதும் சுத்தமாக இருக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் அங்கு ஒரு விளக்கை ஏற்றுவது நல்லது என்று கருதப்படுகிறது. இது வீட்டில் நேர்மறை ஆற்றலை அதிகரிக்கிறது மற்றும் எதிர்மறை விளைவுகளை குறைக்கிறது என்று வாஸ்து சாஸ்திரம் கூறுகிறது.

**முன்னோர்களின் புகைப்படங்கள்**

பலர் செய்யும் ஒரு தவறு, முன்னோர்களின் புகைப்படங்களை பூஜை அறையில் வைத்திருப்பது. வாஸ்து படி, இது நல்லதல்ல. ஏனெனில் பூஜை அறை நேர்மறை ஆற்றலின் மையமாகக் கருதப்படுகிறது. எனவே, முன்னோர்களின் புகைப்படங்களை பூஜை மண்டபத்தில் அல்ல, வீட்டின் தெற்கு சுவரில் வைப்பது நல்லது. பூஜை அறையில் அவற்றை வைத்திருப்பது வீட்டில் தேவையற்ற சண்டைகளுக்கு வழிவகுக்கும் என்று வாஸ்து நிபுணர்கள் கூறுகிறார்கள்.

**கருப்பு நிறத்தைப் பயன்படுத்துதல்**

வீட்டு அலங்காரத்தில் அதிக கருப்பு நிறத்தைப் பயன்படுத்துவது நல்லதல்ல என்று வாஸ்து சாஸ்திரம் கூறுகிறது. கருப்பு நிறம் எதிர்மறையின் அடையாளமாகக் கருதப்படுகிறது. எனவே, சுவர்கள், அலங்காரப் பொருட்கள் அல்லது உட்புற வடிவமைப்பில் அதிக கருப்பு நிறம் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**வண்ணங்களின் சரியான தேர்வு**

வீட்டு அலங்காரத்தில் வெளிர், மென்மையான வண்ணங்களைப் பயன்படுத்துவது எப்போதும் நல்லது என்று வாஸ்து கூறுகிறது. வெள்ளை, வெளிர் நீலம் மற்றும் பச்சை போன்ற நிறங்கள் வீட்டில் அமைதியான சூழ்நிலையை உருவாக்கும் என்று நம்பப்படுகிறது. அதிக தீவிரமான அல்லது பிரகாசமான வண்ணங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பது வீட்டில் நேர்மறை ஆற்றலைத் தக்கவைத்து, குடும்ப உறுப்பினர்களிடையே நல்லிணக்கத்தை அதிகரிக்கும் என்று வாஸ்து கூறுகிறது. இதுபோன்ற சிறிய வாஸ்து வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம், வீட்டில் அமைதி, மகிழ்ச்சி மற்றும் நேர்மறையான சூழ்நிலை அதிகரிக்கும் என்று நம்பப்படுகிறது.


## பொது அறிவிப்பு

எமது கட்சிக்காரர் தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம்,பூ திப்புரம் பேரூராட்சி, உட்கடை ஆதிப்பட்டியில் கதவு எண்.138, சாத்தா கோயில் தெரு என்ற முகவரியில் வசித்து வரும் திரு. சங்கரலிங்கம் அவர்களின் குமரன் திரு.சந்திரன் (ஆதார் எண். 6686 7870 4638) தகவலின் பேரில் கொடுக்கலான பொது அறிவிப்பு. எமது கட்சிகாரர் கடந்த 01.03.2026 ம் தேதி காலை சுமார் 11 மணியளவில் அவருடைய அசல் காலிமனையிடம் மற்றும் வீட்டின் கிரையப் பத்திரத்தை தேனி மாவட்டம், தேனிவட்டம், தேனி அல்லிநகரம் நகராட்சி, அல்லிநகரத்தில் உள்ள ஜெராக்ஸ் கடையில் ஜெராக்ஸ் எடுத்துவிட்டு வீடு திரும்பும்போது தொலைந்துவிட்டது. மேற்படி எமது கட்சிகாரர் அசல் காலிமனையிடம் மற்றும் வீட்டின் கிரையப்பத்திரத்தை பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டவை. தேனி SRO.No.1/3322/1994, ஆகும். ஆகவே, எமது கட்சிக்காரர் அசல் காலிமனையிடம் மற்றும் வீட்டின் கிரையப் பத்திரம் பதிவு செய்த ஆவணம் தொலைந்துவிட்டது. தொலைந்துபோன மேற்சொன்ன ஆவணம் கிடைக்கப் பெற்றால் எமக்கு, அல்லது எமது கட்சிக்காரருக்கே தகவல் கொடுக்கவேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

முகவரி
**P.ஜெயபாரதி,** B.Sc.B.L.,
(வழக்கறிஞர் நோட்டரி பப்ளிக்)
76, PTR மெயின் ரோடு, என். ஆர்.டி. நகர்,
தேனி –625531.
மொபைல் எண்: 9842608689.




# நாக்கில் இந்த 6 அறிகுறிகள் இருந்தால்.. மிகவும் ஆபத்து..!



உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவமனைக்குச் செல்லும்போது, மருத்துவர் முதலில் தங்கள் நாக்கைக் காட்டச் சொல்வதை பலர் பார்த்திருப்போம். ஏன் இதைச் செய்கிறார்கள் என்பதில் பலருக்கு சந்தேகம் உள்ளது. உண்மையில், நாக்கின் நிறம், மேற்பரப்பு, பூச்சு மற்றும் வடிவம் போன்ற காரணிகள் சில நேரங்களில் உடலில் உள்ள உடல்நலப் பிரச்சினைகளைக் குறிக்கின்றன. சில சந்தர்ப்பங்களில், மற்ற அறிகுறிகள் தோன்றுவதற்கு முன்பே நாக்கில் சிறிய மாற்றங்கள் தோன்றும்.

நிறத்தில் ஏற்படும் மாற்றங்கள், விரிசல்கள் அல்லது குணமடையாத புண்கள் போன்ற அறிகுறிகள் தொற்றுகள், ஊட்டச்சத்து குறைபாடுகள் அல்லது பிற உடல்நலப் பிரச்சினைகளைக் குறிக்கலாம். நாக்கில் காணப்படும் மாற்றங்கள் சில நேரங்களில் உடலில் நடக்கும் உள் பிரச்சினைகளின் ஆரம்ப அறிகுறியைக் கொடுக்கக்கூடும் என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்..

**நாக்கில் வெள்ளை பூச்சு**

காலையில் எழுந்தவுடன் நாக்கில் ஒரு மெல்லிய வெள்ளை அடுக்கைப் பார்ப்பது இயல்பானது. இது பொதுவாக துலக்குதல் அல்லது தண்ணீர் குடித்த பிறகு வெளியேறும். ஆனால் பூச்சு தடிமனாகி தொடர்ந்து நீடித்தால், அது மோசமான வாய்வழி சுகாதாரம், நீரிழப்பு அல்லது வாய்வழி த்ரஷ் எனப்படும் பூஞ்சை தொற்று காரணமாக ஏற்படுகிறது. கேண்டிடா எனப்படும் ஈஸ்டின் அதிகப்படியான வளர்ச்சியின் போது இந்தப் பிரச்சனை ஏற்படுகிறது. பலவீனமான நோயெதிர்ப்பு அமைப்பு உள்ளவர்கள், நீரிழிவு நோயாளிகள் அல்லது அடிக்கடி நுண்ணுயிர் எதிர்ப்பிகளை உட்கொள்பவர்க ளுக்கு இது மிகவும் பொதுவானது. நாக்கு கிரீமி வெள்ளை நிறத்தில் தோன்றும், சில சமயங்களில் வீக்கம் அல்லது வலியுடன் இருக்கும்.

**ஸ்ட்ராபெரி நாக்கு**

சில நேரங்களில் நாக்கு மிகவும் சிவப்பாகவோ அல்லது வீங்கியதாகவோ தோன்றும். இது பொதுவாக ஸ்ட்ராபெரி நாக்கு என்று அழைக்கப்படுகிறது. இது உடலில் வைட்டமின் பி12 அல்லது ஃபோலிக் அமிலத்தின் குறைபாட்டைக் குறிக்கலாம். சில தொற்றுகள் அல்லது ஸ்கார்லட் காய்ச்சல் போன்ற நோய்களின் போதும் இந்த மாற்றம் தோன்றக்கூடும். சைவ உணவு உண்பவர்கள் அல்லது செரிமான அமைப்பில் ஊட்டச்சத்துக்களை சரியாக உறிஞ்சாதவர்களிடமே வைட்டமின் பி12 குறைபாடு மிகவும் பொதுவானது. சோர்வு, பலவீனம் மற்றும் கைகளில் கூச்ச உணர்வு போன்ற அறிகுறிகளும் ஏற்படலாம்.

**நாக்கில் விரிசல்கள்**

சிலருக்கு நாக்கில் சிறிய விரிசல்கள் அல்லது பிளவுகள் ஏற்படுகின்றன. இது பிளவுபட்ட நாக்கு என்று அழைக்கப்படுகிறது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில், இது பாதிப்பில்லாதது. ஆனால் சில நேரங்களில் இது ஊட்டச்சத்து குறைபாடு அல்லது நாள்பட்ட எரிச்சலாலும் ஏற்படலாம். உணவுத் துகள்கள் விரிசல்களில் சிக்கிக்கொண்டால், அது துர்நாற்றம் அல்லது அசௌகரியத்தை ஏற்படுத்தும். போதுமான அளவு தண்ணீர் குடிப்பதும், நாக்கை சரியாக சுத்தம் செய்வதும் பிரச்சனையைக் கட்டுப்படுத்த உதவும். இருப்பினும், விரிசல்கள் திடீரென தோன்றினால் அல்லது வலியை ஏற்படுத்தினால், நீங்கள் ஒரு மருத்துவரை அணுக வேண்டும்.

**குணமடையாத வாய் புண்கள்**

பொதுவாக ஒன்று அல்லது இரண்டு வாரங்களுக்குள் மறைந்துவிடும். ஆனால் நாக்கில் ஏற்படும் புண் இரண்டு வாரங்களுக்கு மேல் நீடித்தால், அதைப் புறக்கணிக்கக்கூடாது. எரிச்சல், தொற்றுகள் அல்லது சில நேரங்களில் வாய்வழி புற்றுநோய் போன்ற கடுமையான பிரச்சினைகளாலும் இது ஏற்படலாம். புகைபிடிப்பவர்கள், புகையிலை மெல்லுபவர்கள் அல்லது மது அருந்துபவர்கள் அதிக ஆபத்தில் உள்ளனர். புண் பெரிதாகி, வலிமிகுந்ததாக அல்லது விழுங்குவதில் சிரமம் இருந்தால், உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும்.

**வெளிர் நாக்கு**

நாக்கு வழக்கத்திற்கு மாறாக வெண்மையாகவோ அல்லது வெளிர் நிறமாகவோ தோன்றினால், அது இரத்த சோகையின் அறிகுறியாக இருக்கலாம். இந்த நிலையில், உடலில் போதுமான இரத்த சிவப்பணுக்கள் இல்லை. இரும்புச்சத்து குறைபாடு இரத்த சோகைக்கு முக்கிய காரணமாகும். இந்தப் பிரச்சனை உள்ளவர்கள் சோர்வு, தலைச்சுற்றல் அல்லது சுவாசிப்பதில் சிரமம் போன்ற அறிகுறிகளையும் அனுபவிக்கலாம்.

**நாக்கில் மஞ்சள் பூச்சு**

சில நேரங்களில் நாக்கில் மஞ்சள் பூச்சு தோன்றும். இது வாயில் பாக்டீரியாக்கள் குவிவதால் ஏற்படலாம். நீரிழப்பு, புகைபிடித்தல் அல்லது செரிமானப் பிரச்சினைகளும் காரணமாக இருக்கலாம்.

வாய்வழி சுகாதாரம், வறண்ட வாய் அல்லது சில மருந்துகளை உட்கொள்வதாலும் இந்த மாற்றம் ஏற்படலாம். பொதுவாக, நாக்கை சுத்தம் செய்வதும் போதுமான அளவு தண்ணீர் குடிப்பதும் இந்தப் பிரச்சனையை குறைக்க உதவும். இருப்பினும், மஞ்சள் பூச்சு நீண்ட நேரம் நீடித்தால் அல்லது பிற அறிகுறிகள் ஏற்பட்டால், சிகிச்சை அவசியம்.



# இந்தியா - நியூசிலாந்து' v இடையே நடைபெறும், 'டி20' உலக கோப்பை இறுதிப் போட்டியில் இந்தியா வெற்றி பெற வேண்டி மதுரையில் சிறப்பு பிரார்த்தனை!

மதுரை, மார்ச். 07–

இந்தியா – நியூசிலாந்து'v இடையே நடைபெறும், 'டி20' உலக கோப்பை இறுதிப் போட்டியில் இந்தியா வெற்றி பெற வேண்டி மதுரையில் சிறப்பு பிரார்த்தனை 8 ஆம் தேதி ,(நாளை) 'இந்தியா – நியூசிலாந்து' இடையே , 'டி20' உலக கோப்பை இறுதிப் போட்டி நடைப்பெறுகிறது. இதில் இந்தியா அணி வெற்றி பெற வேண்டி மதுரை எஸ்.எஸ்.காலனி பகுதியில் உள்ள ஶ்ரீ மகா பெரியவா கோவிலில் அனுஷத்தின் அனுக்கிரகம் சார்பில் சிறப்பு பிரார்த்தனை நடைபெற்றது. முன்னதாக மகாபெரியவர் விக்ரகம் மற்றும் வெள்ளிப் பாதுகைக்கு மஞ்சள் பொடி, பஞ்ச கவ்யம், பால், பஞ்சாமிர்தம், தேன், நெய், இளநீர், திருநீறு, சந்தனம் உள்ளிட்ட பல்வேறு அபிஷேகங்கள் நடைபெற்றது. அதை தொடர்ந்து சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை நடைப்பெற்றது. இந்த நிகழ்ச்சியில் கோவிலுக்கு வந்த பக்தர்கள் இந்திய கிரிக்கெட் அணியின் வீரர்கள் உள்ளடக்கிய பிளக்ஸ் போர்டை வைத்து டி20' உலக கோப்பை இறுதிப் போட்டியில் இந்திய அணி பெற வேண்டி சிறப்பு பிரார்த்தனை செய்தனர். தொடர்ந்து கையில் தீபம் ஏற்றி ஆல் த பெஸ்ட் இந்தியா என கோஷங்கள் எழுப்பினர். இந்த நிகழ்ச்சியில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை மதுரை அனுஷத்தின் அனுகிரகம் நிறுவனர் நெல்லை பாலு செய்திருந்தார். பேட்டி நெல்லை பாலு அனுஷத்தின் அனுகிரகம் நிறுவனர் நாளை நடைபெறும் டி20 உலக கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி நியூசிலாந்து அணியை வெற்றி பெற்று உலக கோப்பையை பெற மதுரை அனுஷத்தின் அனுக்கிரகம் அமைப்பு சார்பில் நிறுவனர் நெல்லை பாலு தலைமையில் மதுரை எஸ் எஸ் காலனி ஶ்ரீ மஹா பெரியவா கோவிலில் பெண்கள் விளக்கு ஏந்தி ஆல் தி பெஸ்ட் இந்தியா என்கிற கோஷத்தோடு பிரார்த்தனை செய்த போது எடுத்த படம்.

# தெற்கு சட்டமன்ற தொகுதியில் பல்வேறு திட்ட பணிகள் துவக்க விழா!

திருப்பூர், மார்ச். 07–

திருப்பூர் மத்திய மாவட்டம் தெற்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கொங்கணகிரி பகுதி கழகத்தில் தெற்கு தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற சாலை ஊர் கட்டமைப்பு திட்டத்தில் ரூபாய் 3 கோடியே 50 லட்சம் மதிப்பீட்டில் பல்வேறு திட்ட பணி துவக்க விழாவினை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திருப்பூர் திமுக மத்திய




மாவட்ட கழக செயலாளர் க செல்வராஜ் எம்எல்ஏ துவக்கி வைத்தார் உடன் மாநகரச் செயலாளர் டி கே டி மூ நாகராஜ். மண்டல தலைவர் உமா மகேஸ்வரி சிட்டி வெங்கடாசலம். பகுதி செயலாளர் ஈஸ்வரமூர்த்தி. மாநகராட்சி அதிகாரிகள் ஆறுமுகம். சுப்பையா. கவு ன்சிலர் திவாகரன். தலைமை செயற்குழு உறுப்பினர் சலீம் பாய். மற்றும் திமுக வட்டக் கழக செயலாளர்கள். தீப்பெட்டி ரவிச்சந்திரன்.க வெங்கடேஷ். திருநாவுக்கரசு.பர்னிச்சர் செந்தில்.சுகுமார். ஜெய்சங்கர்.சபி ராஜேந்திரன். திருநாவுக்கரசு.மற்றும் தலைமைக் கழக பேச்சாளர் ரஜினி செந்தில். கழக நிர்வா கிகள் ஊர் பொதுமக்கள் பெரும் திரளாக பங்கேற்றனர்..

# இரத்ததான முகாம்!




ராசிபுரம், மார்ச். 07–

இராசிபுரம், வநேத்ரா குழுமத்தின் முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), முத்தாயம்மாள் பாலிடெக்னிக் இன்ஸ்டிடியூஷனின் இளைஞர் செஞ்சிலுவை மற்றும் செஞ்சுருள் சங்கம், இராசிபுரம் அரிமா சங்கம் மற்றும் சேலம் ஶ்ரீ கோகுலம் மருத்துவமனை ஆகியவை இணைந்து நடத்திய இரத்ததான முகாமானது கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இம்முகாமினை கல்லூரியின் முதல்வர், முனைவர் எஸ்.பி.விஜய்குமார், சமுதாய செயல்பாட்டுத் தலைவர் முனைவர் எம். ராமமூர்த்தி, இளைஞர் செஞ்சிலுவை மற்றும் செஞ்சுருள் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர், திரு ந.ராதாகிருஷ்ணன், ஶ்ரீ கோகுலம் மருத்துவமனையின் மேலாண்மை இயக்குனர் டாக்டர் க.அர்த்தநாரி, மருத்துவர் ஜெ.நடராஜன், மருத்துவ அதிகாரி டாக்டர் நா.ஷியாம், மக்கள் தொடர்பு அலுவலர் கி.சுரேஷ், இராசிபுரம் அரிமா சங்கத்தின் தலைவர் ரா.பெரியசாமி, செயலாளர் மா.மூர்த்தி மற்றும் க.சிவமணி, பொருளாளர் ப.சிவகுமார் மற்றும் மா.ராகவன், மா.தங்கதுரை, ரமேஷ் (எ ) பச்சமுத்து, கதிரவன் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

இம்முகாமில், சேலம் ஶ்ரீ கோகுலம் மருத்துவமனை இரத்த வங்கிக்காக கல்லூரி மாணவர்கள் சுமார் 41 யூனிட் இரத்தத்தை தானமாக வழங்கினர். அவர்களுக்கு பழச்சாறு மற்றும் பிஸ்கட் ஆகியவை வழங்கப்பட்டன.

இரத்ததானம் செய்த மாணவர்களுக்கு இரத்தவங்கி யின் மருத்துவர் சான்றிதழ்க ளை வழங்கிப் பாராட்டினார்.

# நிதி நிறுவனம் திறப்பு விழா, ஜி.கே.வாசன் பங்கேற்பு!

ஈரோடு, மார்ச். 07–

ஈரோடு செங்கோடம்பாளையத்தில் செந்தூர் வேலவன்




நிதி நிறுவனத்தை த மா கா தலைவர் ஜிகே வாசன் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் சுரேஷ் மூப்பனார், மாநில துணைத்தலைவர் விடியல் சேகர், மாநில பொதுச் செயலாளர் யுவராஜ், மத்திய மாவட்ட தலைவர் விஜயகுமார், தெற்கு மாவட்ட தலைவர் வி பி சண்முகம், பொதுக்குழு உறுப்பினர் எஸ் டி சந்திரசேகர், கொங்கு மண்டல இளைஞர் அணி தலைவர் அபிராமி செந்தில் குமார், துணைத் தலைவர் கார்த்திக் கண்ணன், மேத்தா கந்தசாமி, செல்வகுமார், கவின் பிரசாத், பேட்டை யுவராஜ், பாரிசன் பாய், ஆகியோர் கலந்து கொண்டனர் நிகழ்ச்சி ஏற்பாடுகளை நிதி நிறுவன பங்குதாரர்கள் விஜயபாஸ்கர் சரண்யா, கௌரிசங்கர் அமுதா ஆகியோர் செய்திருந்தனர்.

# தலைமைச் செயலகம் முன்பு கருப்பு கொடியுடன் காத்திருப்பு போராட்டம்..!

நாமக்கல், மார்ச். 07–

நாமக்கல் மாவட்டம், மோகலூர் வட்டம், பெரமாண்டம்பாளையம் கிராமம், சர்வே எண். 326/6A1, SAI–ல் சட்ட விரோதமாக கோழிப்பண்ணை அமைப்பதற்கு தடை





விதிக்க வேண்டும் என்று நாமக்கல் மாவட்ட நிர்வாகத்திற்கு கடந்த ஐந்து மாதங்களாக பலமுறை மனுக்கள் கொடுத்தும் இதுவரை எவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டவில்லை. எனவே சட்டவிரோதமாக மக்கள் குடியிருப்பு பகுதிக்கு மிக அருகிலேயே கோழிப்பண்ணை அமைப்பதற்கு தடை செய்ய வேண்டும் என்று தமிழக அரசை வலியுறுத்தி தலைமை செயலகம் முன்பு வருகின்ற 11.03.2026 10.00 மணி அளவில் கருப்பு கொடியுடன் காத்திருப்பு போராட்டம் இளம் விவசாயிகள் சங்கத்தின் சார்பாக நடத்த உள்ளோம் என்பதை இந்த அறிக்கையின் வாயிலாக தெரிவித்து அறிக்கை.




# வேலை வாய்ப்பு

## சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா – 275 காலியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: மத்திய வங்கி
வேலை வகை: மத்திய அரசு வேலைகள்
வேலைவாய்ப்பு வகை: வழக்கமான அடிப்படை
மொத்த காலியிடங்களின் எண்ணிக்கை: 275 சிறப்பு அதிகாரி பதவிகள்
பணியிட இடம்: இந்தியா முழுவதும்
தொடக்க தேதி: 28.02.2026
கடைசி தேதி: 23.03.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://centralbank.bank.in/

# அதிமுகவில் மீண்டும் இணைந்த வெல்லமண்டி நடராஜனுக்கு புதிய பொறுப்பு..!



சென்னை, மார்ச். 07–

2016–2021 காலக்கட்டத்தில் தமிழ்நாடு அரசின் சுற்றுலாத்துறை அமைச்சராக பணியாற்றியவர் வெல்லமண்டி நடராஜன்.

அதிமுகவில் மீண்டும் இணைந்த முன்னாள் அமைச்சர் வெல்லமண்டி நடராஜனுக்கு பொறுப்பு வழங்கி உள்ளார் எடப்பாடி பழனிசாமி.. அதன்படி அதிமுக அமைப்பு செயலாளராக வெல்லமண்டி என்.நடராஜன் நியமனம் செய்யப்பட்டுள்ளதாகவும் அக்கட்சி பொதுச்செயலாளர் இபிஎஸ் அறிவித்துள்ளார்..

## சினிமா துளிகள்..!

# போயஸ்கார்டனே இனி நம்ம ஏரியா தான்!! நயன்தாராவின் பக்கா ப்ளான்!!



சென்னையில் புகழ்பெற்ற பகுதி போயஸ் கார்டன். இங்கே நயன்தாரா ஒரு ஆடம்பர அடுக்குமாடி குடியிருப்பை வாங்கி இருக்கிறார். போயஸ் கார்டனில் லெகசி என்ற பெயரில் கட்டப்பட்டுள்ள ஆடம்பர குடியிருப்பில் டியூப்லக்ஸ் முறையில் கட்டப்பட்டிருக்கும் அபார்ட்மெண்டினை வாங்கியுள்ளார். ஏற்கனவே போயஸ் கார்டனில் தனி மாளிகையே கட்டி இருக்கும் நயன்தாரா இப்போது கூடுதலாக ஒரு அபார்ட்மெண்டும் வாங்கி இருக்கிறார்.

31.5 கோடி ரூபாயை கொடுத்து இந்த வீட்டினை அவர் வாங்கி இருப்பது தெரிய வந்துள்ளது. சென்னையில் புகழ்பெற்ற இடங்களில் ஒன்றாக போயஸ் கார்டன் திகழ்கிறது. இங்குதான் மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் வீடு இருக்கிறது. ரஜினிகாந்தின் வீடும் இங்கு தான் அமைந்துள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்னர் நடிகர் தனுஷும் இங்கே பல நூறு கோடிக்கு வீடு கட்டி குடியேறினார்.ஏற்கனவே நயன் தனக்கு சொந்தமாக ஒரு மாளிகையை போயஸ் கார்டனில் கட்டியுள்ளார். இங்கே கணவர் விக்னேஷ் சிவனுக்காக தனி அலுவலகமும் கட்டி தந்துள்ளார். இந்நிலையில் அவர் 14,369 சதுர அடி சூப்பர் பில்டப் ஏரியா கொண்ட வீட்டினை வாங்கி இருக்கிறார்.

ஒரு சதுர அடி 21,946 ரூபாய் என விலை கொடுத்து வாங்கியுள்ளார். டிசம்பர் 15ஆம் தேதி லேண்ட்மார்க் மெட்ரோ ப்ராஜெக்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் இந்த வீட்டினை நயன்தாராவுக்கு விற்பனை செய்து பத்திர பதிவு நடந்திருப்பது தெரிய வந்துள்ளது. இந்த புதிய குடியிருப்பில் நயனுக்கு 90% பங்கும், விக்னேஷ் சிவனுக்கு 10 சதவீத பங்கும் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. நயன்தாராவை பொறுத்தவரை ஹைதராபாத், சென்னை , கேரளா என பல ஊர்களில் சொந்தமாக அடுக்குமாடி குடியிருப்புகளையும் வாங்கி வைத்திருக்கிறார். விக்னேஷ் சிவனை திருமணம் செய்து கொண்ட பிறகு சென்னையிலேயே செட்டிலாகி விட்டார். இதன் ஒரு பகுதியாகதான் முதலில் போயஸ் கார்டனில் பழைய வீடு ஒன்றை வாங்கி அதனை அனைத்து வசதிகளும் கொண்ட மாளிகையாக மாற்றினார். இந்நிலையில் மேலும் ஒரு வீட்டினை அவர் வாங்கியுள்ளார்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



# திருச்சியில் விஜய் மாநாடு நடத்த திட்டம்? - அரசியல் களத்தில் பரபரப்பு!

திருச்சி என்றாலே திருப்புமுனை என சொல்வதற்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுவது உண்டு. தமிழ்நாட்டு வரலாற்றில் இந்தி திணிப்புக்கு எதிராக முக்கிய போராட்டங்கள் நடைபெற்ற இடம் திருச்சி. அது மட்டுமல்ல, முதன் முதலில் 1957–ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. போட்டியிடலாமா? வேண்டாமா? என கருத்து கேட்கப்பட்ட இடம் இதுதான். 1972–ம் ஆண்டு தி.மு.க.வில் இருந்து வெளியேறிய எம்.ஜி.ஆர். முதன்முதலில் பொதுக்கூட்டம் நடத்தி மக்களிடம் நியாயம் கேட்டதும் இங்கு தான்.

இப்படி வரலாற்று பின்னணி ஒருபுறம் இருந்தாலும், தமிழகத்தின் மையப் பகுதியில் திருச்சி மாவட்டம் அமைந்து இருப்பதால் தொண்டர்களை ஒருங்கிணைக்க வசதியாக இருக்கும் என்பதாலும் அரசியல் கட்சியினர் திருச்சியை தேர்வு செய்கிறார்கள். தற்போது தேர்தல் தேதி அறிவிப்புக்கு முன்பே பிரசாரம், பொதுக்கூட்டம், மாநாடு என்று நடத்தி வருவதால் அரசியல் களம் சூடுபிடிக்க தொடங்கி விட்டது. நாம் தமிழர் கட்சி சார்பில் கடந்த மாதம் 21–ந் தேதி திருச்சியில் மாநாடு நடத்தினர். இந்த மாநாட்டில் 234 தொகுதிகளின் வேட்பாளர்களையும் ஒரே மேடையில் நிற்க வைத்து அந்த கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அறிமுகப்படுத்தினார்.



அடுத்தபடியாக வருகிற 9–ந் தேதி (திங்கட்கிழமை) திருச்சி சிறுகனூர் பகுதியில் தி.மு.க. மாநில மாநாட்டை நடத்துகிறது. சுமார் 10 லட்சம் பேர் திரளும் அளவுக்கு பிரமாண்டமாக இந்த மாநாடு நடைபெறும் என்று அந்த கட்சியின் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இதனை தொடர்ந்து தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் பஞ்சப்பூர் அருகே வருகிற 11–ந் தேதி (புதன்கிழமை) பிரமாண்ட பொதுக்கூட்டம் நடக்கிறது. இந்த கூட்டத்தில் பிரதமர் மோடி, மத்திய மந்திரி அமித்ஷா ஆகியோர் கலந்து கொண்டு பேச உள்ளனர்.

இந்தநிலையில் தமிழக வெற்றிக்கழகம் சார்பில் இந்த மாத இறுதியில் திருச்சியில் மாநாடு நடத்த திட்டமிட்டு இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. சட்டமன்ற தேர்தல் நெருங்கும் நிலையில், திருச்சியில் த.வெ.க. தலைவர் விஜய் நடத்தவுள்ள மாநாடு அந்த கட்சிக்கு திருப்புமுனையை ஏற்படுத்தும் என கருதுகிறார்கள். மேலும் இந்த மாநாட்டில் த.வெ.க. வேட்பாளர்களை அறிமுகம் செய்ய வாய்ப்பு உள்ளதாகவும் கூறப்படுகிறது.

தி.மு.க., அ.தி.மு.க. என பிரதான அரசியல் கட்சிகள் திருச்சியில் நடத்திய மாநாடு, பொதுக்கூட்டங்கள் அந்த கட்சிகளுக்கு எப்படி திருப்புமுனையை ஏற்படுத்தியதோ, அதேபோல் தங்களுக்கும் திருச்சி திருப்புமுனையை தரும் என்ற எதிர்பார்ப்பில் அடுத்தடுத்து ஒவ்வொரு அரசியல் கட்சிகளாக திருச்சியில் சங்கமித்து வருகின்றன. மொத்தத்தில் போட்டிப் போட்டு பலத்தை நிரூபிக்கும் அரசியல் கட்சிகளால் கோடைகாலத்துக்கு முன்பே திருச்சியில் அனல் பறக்க தொடங்கிவிட்டது.

# கர்நாடகத்தில் மதுபான விலை உயருகிறதா..? - சித்தராமையா சூசக தகவல்!



பெங்களூரு, மார்ச். 07–

கர்நாடக மாநில பட்ஜெட்டை தாக்கல் செய்து அம்மாநில முதல்–மந்திரி சித்தராமையா வெளியிட்ட அறிவிப்புகள் பின்வருமாறு:–

2026–2027–ம் நிதி ஆண்டில் வணிக வரி வருவாய் இலக்கு ரூ.1 லட்சத்து 25 ஆயிரம் கோடியாக நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. கலால் துறையில் பணியிடமாற்றம் ஆன்லைன் மூலம் மேற்கொள்ளப்படும்.

மதுபானத்தில் லிட்டர் அளவை கணக்கிட்டு அத்ற்கு தகுந்தார்போல் கலால் வரியை நியமிக்கும் திட்டம் வருகிற ஏப்ரல் மாதம் முதல் அமல்படுத்தப்படும்.

அது அடுத்த 3 முதல் 4 ஆண்டுகள் அமலில் இருக்கும். இதன்மூலம் விலை நிர்ணயம் 16 நிலைகளில் இருந்து 8 நிலைகளாக மாறும். கலால் துறையில் 2026–2027–ம் ஆண்டுக்கான வரி வருவாய் இலக்காக ரூ.45 ஆயிரம் கோடி நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. அதுபோல் முத்திரை மற்றும் பத்திர பதிவுத்து றையில் ரூ.29 ஆயிரம் கோடி வருவாய் இலக்கை எட்ட திட்டமிடப்பட்டு உள்ளது. மேலும் போக் குவரத்து துறையில் ரூ.15 ஆயிரத்து 500 கோடி வரி வருவாயை ஈட்ட இலக்கு நிர்ணயி க்கப்பட்டு இருக்கிறது.

கனிம வளத்துறையில் காப்புரிமை மூல கிடைக்கும் வருவாய் ரூ.11 ஆயிரம் கோடியாக இலக்கு நிர்ண யிக்கப்பட்டுள்ளது. 2026–2027–ம் ஆண்டுக்கான மாநில வருவாய் ரூ.3 லட்சத்து 15 ஆயிரத்து 50 கோடியாக கணக் கிடப்பட்டு உள்ளது. இதில் மாநில வரி வருவாய் மூலம் ரூ.2 லட்சத்து 20 ஆயிரம் கோடியும், வரி அல்லாத வருவாய் மூலம் ரூ.16 ஆயிரம் கோடியும் மத்திய அரசிடம் இருந்து வர வேண்டிய வரிப்பகிர்வு உள்ளிட்ட நிதிகள் மூலம் ரூ.79 ஆயிரத்து 50 கோடியும் அடங்கும்.

மேலும் ரூ.1 லட்சத்து 32 அயிரம் கோடி நேரடி கடனும், முதலீட்டு கடன் மூலம் ரூ.190 கோடியும் என மொத்தம் ரூ.4 லட்சத்து 47 ஆயிரத்து 240 கோடி நிதி திரட்ட திட்டமிடப்பட்டு உள்ளது.

மாநிலத்தின் மொத்த செலவினங்கள் ரூ.4 லட்சத்து 48 ஆயிரத்து 4 கோடி ஆகும். இதில் மாநிலத்து வருவாய் பற்றாக்குறை ரூ.33 ஆயிரத்து 957 கோடியாக உள்ளது. மொத்த நிதி பற்றாக்குறை ரூ.97 ஆயிரத்து 449 கோடி ஆகும். அதுபோல் மாநிலத்தின் மொத்த கடன் ரூ.8 லட்சத்து 24 ஆயிரத்து 389 கோடியாக உள்ளது.

மாநிலத்தின் மொத்த கடன் மற்றும் நிதி பற்றாக்குறை இரண்டும் கர்நாடக நிதி பொறுப்பு சட்டத்தின் கீழ் குறிப்பிட்ட அளவில் தான் இருக்கிறது. இதன்மூலம் மாநில அரசு நிதி மேலாண்மையை பொறுப்புடன் நிர்வ கித்து வருவதை உறுதி செய்கிறது.

இவ்வாறு முதல்–மந்திரி சித்தராமையா கூறினார்.

கலால் வரி மாற்றி அமைக்கப்படுவதன் மூலம் மதுபான விலை உயரும் என்று முதல்–மந்திரி சித்தராமையா சூசகமாக பட்ஜெட்டில் அறிவிப்பை வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பற்றி எரியும் தெஹ்ரான் சர்வதேச விமான நிலையம்.. இஸ்ரேல் குண்டு மழை!

ஈரான், மார்ச். 07–

ஈரான் மீதான இஸ்ரேல் – அமெரிக்க தாக்குதலும், பதிலடியாக மத்திய கிழக்கு நாடுகளில் அமெரிக்க தளங்கள் மீதான ஈரான் தாக்குதலும் ஒரு வார்த்தை எட்டியுள்ளது.

இந்நிலையில் ஈரான் தலைநகர் தெஹ்ரானை குறிவைத்து மீண்டும் தாக்குதல் தாக்குதல் நடந்து வருகிறது.

தெஹ்ரானில் உள்ள மிக முக்கியமான மெஹ்ராபாத் சர்வதேச விமான நிலையம் மீது இஸ்ரேலிய போர் விமானங்கள் ஏவுகணை மழை பொழிந்தன.



இந்தத் தாக்குதலால் விமான நிலையத்தில் பெரும் தீ விபத்து ஏற்பட்டது. ஓடுதளத்தில் நின்றிருந்த பல விமானங்கள் எரிந்து சாம்பலாகின. அந்தப் பகுதி முழுவதும் அடர்ந்த கரும்புகை சூழ்ந்துள்ளது.

விமான நிலையத்தை சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள் அச்சமடைந்து பாதுகாப்பான இடங்களுக்கு ஓடினர்.

இஸ்ரேலிய போர் விமானங்களைத் தடுக்க ஈரானின் வான் பாதுகாப்பு அமைப்பு முயன்ற போதிலும், அது பலனளிக்கவில்லை எனத் தெரிகிறது.

தாக்குதலைத் தொடர்ந்து மெஹ்ராபாத் விமான நிலையத்திலிருந்து அனைத்து விமானப் போக்குவரத்தும் முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் ஏற்பட்டுள்ள உயிர்ச்சேதங்கள் குறித்து ஈரான் அரசு இதுவரை எந்த அதிகாரப்பூர்வ அறிவிப்பையும் வெளியிடவில்லை . மெஹ்ராபாத் விமான நிலையம் பயணிகள் போக்குவரத்திற்கு மட்டுமின்றி, ஈரானின் ராணுவப் போக்குவரத்துக்கும் மிக முக்கியமான மையமாகும்.

# தமிழ்நாட்டில் மேலும் 1,000 மின்சார குளிர்சாதன பேருந்துகள் கொள்முதல் செய்ய ஒப்பந்தம்!



சென்னை, மார்ச். 07–

தமிழ்நாட்டில் சென்னையில் குளிர்சாதன வசதி கொண்ட பேருந்துகள் உள்பட 625 தாழ்தள வசதி கொண்ட மின்சார பேருந்துகளை மாநகர் போக்குவரத்து க்கழகம் கொள்முதல் செய்துள்ளது. இந்தப் பேருந்துகள் அனைத்தும் 2025 ஜூன் முதல் 2026 மார்ச் வரை 5 கட்டங்களாக பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டன.

இந்த நிலையில், குளிர்சாதன வசதி கொண்ட மேலும், 1,000 தாள்தள சொகுசு மின்சார பேருந்துகளை மொத்த செலவு ஒப்பந்த அடிப்படையில் கொள்முதல் செய்ய போக்குவரத்து க்கழகம் திட்டமிட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தத்தை மாநகர் போக்குவரத்து க்கழகம் கோரியுள்ளது.

ஒப்பந்தம் கோரும் நிறுவனங்கள் தங்கள் விண்ணப்பங்களை மாநகர் போக்குவரத்துக்கழகத்தின் அதிகாரபூர்வ இணைய தளத்தில் இருந்து பதிவி றக்கம் செய்து கொள்ளலாம். மார்ச் 25 முதல் ஏப். 7–ஆம் தேதி மாலை 4 மணி வரை ஒப்பந்தத்துக்கான ஆவணங்களை சமர்ப்பிக்கலாம்.

ஏப். 7 –ஆம் தேதி மாலை 4.30–க்கு ஒப்பந்தம் திறக்கப்படும். தகுதி வாய்ந்த நிறுவனங்களிடம் ஒப்பந்தம் வழங்கப்படும் என்றும், விரைவில் பேருந்துகள் கொள்முதல் செய்யப்பட்டு மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும் என்றும் மாநகர் போக்குவரத்துக்கழக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



நிலா சேவை மைய அறக்கட்டளை சார்பாக மதுரை, வடக்குமாசிவீதி டி. எம் & ஆர் பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் உலக மகளிர் தினவிழா கொண்டாடபட்டது விழாவில் தலைமை ஆசிரியர் செல்வின் அவர்கள் வரவேற்புரையாற்றிட அறக்கட்டளை நிறுவனர் கவிக்குயில் கணேசன் சிறப்புரையற்றிட பொருளாளர் ஆனந்திகணேசன், திட்ட ஆலோசகர் வாணிமாணிக்கம் வாழ்த்திப்பேசி மாணவிகளுக்கு இனிப்புகள் வழங்கினர் விழாவில் ஆசிரியர்கள் கிருத்திகா, ராஜ்குமார், ஆப்ரகாம், சாம், கிருபா, டேவிட் மற்றும் அலுவலக உதவியாளர் ஜெஸ்ஷிலின்ஸியால், விஜயா கலந்து கொள்ள விழாவில் தமிழாசிரியர் செல்வராணி நன்றி கூறினார்.

# சென்னையில் உள்ள அமெரிக்க துணை தூதரகத்தின் தலைவராக மரியானா எல்.நெய்ஷுலர் பொறுப்பேற்பு!

சென்னை, மார்ச். 07–

சென்னையில் உள்ள அமெரிக்க துணைத் தூதரகத்தின் தலைமை பொறுப்பை மரியானா எல்.நெய்ஷுலர் ஏற்றுக்கொண்டுள்ளார். இதுகுறித்து துணைத் தூதர் மரியானா எல். நெய்ஷுலர் பேசும்போது, "நமது இருதரப்பு உறவின் இந்த முக்கியமான தருணத்தில் தென்னிந்தியாவில் அமெரிக்காவைப் பிரதிநிதித்துவப்படு த்துவதில் நான் பெருமைப்படுகிறேன்.

அதிபர் டிரம்ப், வெளியுறவுத்துறை செயலாளர் ரூபியோ மற்றும் இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் கோர் ஆகி யோரின் தலைமையின் கீழ், அமெரிக்கர்கள் மற்றும் இந்தியர்களுக்கு சிறந்த பலன்களை வழங்கும் கூட்டு செயல்பாடுகளை வலுப்படுத்து வதில் நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம். வர்த்தக உறவு களை விரிவுபடுத்துவதற்கும், அமெரிக்க வணிகங்களை ஆதரிப்பதற்கும், நமது உறவை மிகவும் வலுவாக்கும் மக்களு க்கு இடையேயான தொடர்புகளை வளர்ப்பதற்கும் நான் செயலாற்றுவேன்" என்றார். சென்னைக்கு வருவதற்கு



முன்னர் தாஷ்கண்டில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் அரசியல் மற்றும் பொருளாதார விவகாரங்களுக்கான ஆலோசகராக துணைத் தூதர் நெய்ஷுலர் பணியாற்றினார்.

ஜெருசலேம் மற்றும் அம்மான் தூதரகங்களில் பொருளாதார துணை ஆலோசகராகவும், வாஷிங்டன் டி.சி., துபாய், ஸ்கோபியே மற்றும் மாஸ்கோவிலும் அவர் பணிபுரிந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது



திருப்பூர் மாவட்டம் மாநகராட்சி 6 வார்டு டி மண்ணரையில் உள்ள அரசு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் நடைபெற்ற ஆண்டு விழாவில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது இதில் வெற்றி பெற்ற மாணவச் செல்வங்களுக்கு 6 வது வார்டு காங்கிரஸ் தலைவர் கிருஷ்ணதாஸ் பரிசுகளை வழங்கினார் உடன் கவுன்சிலர் கோபால்சாமி மற்றும் ஆசிரியர்கள் மாணவச் செல்வங்கள் பங்கேற்றனர்.

# பாகிஸ்தானில் பெட்ரோல் விலை அதிரடி உயர்வு.. இந்தியாவிலும் உயருமா?

பாகிஸ்தான், மார்ச். 07–

ஈரான் மீதான இஸ்ரேல் – அமெரிக்க தாக்குதலும், பதிலடியாக மத்திய கிழக்கு நாடுகளில் அமெரிக்க தளங்கள் மீதான ஈரான் தாக்குதலும் ஒரு வாரத்தை எட்டியுள்ளது. மேலும் உலகின் ஐந்தில் ஒரு பங்கு அதாவது 20 சதவீத எண்ணெய் தேவைக்கான ஏற்றுமதி பாதையான ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் மூடியுள்ளது.

இதனால் மத்திய கிழக்கில் இருந்து கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்யமுடியாமல் கப்பல்கள் தவித்து வருகின்றன. இதனால் உலக நாடுகளில் கச்சா எண்ணெய் தட்டுப்பாடு ஏற்பட்டு பெட்ரோல், டீசல், எரிவாயு விலைகள் உயர்ந்து வருகின்றன.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை சில நாட்களிலேயே ஒரு பேரல் 78 டாலரிலிருந்து 107 டாலராக உயர்ந்துள்ளது.

இதனிடையே பாகிஸ்தானில் பெட்ரோல் விலையை ரூ.55 உயர்த்தி அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது. இந்த விலை உயர்வு நேற்று நள்ளிரவு முதல் அமலுக்கு வந்தது. இதன் மூலம்



பாகிஸ்தானில் ஒரு லிட்டர் பெட்ரோல் பாகிஸ்தான் ரூபாய் மதிப்பில் 321 க்கு விற்பனை ஆகிறது. டீசல் ஒரு லிட்டர், பாகிஸ்தான் ரூபாய் மதிப்பில் 335.86 க்கு விற்பனை ஆகிறது

பாகிஸ்தான் தனது 90% எண்ணெய் மற்றும் 99% எல்என்ஜி எரிவாயு இறக்குமதிக்கு ஹார்முஸ் ஜலசந்தி பாதையையே நம்பியுள்ளது. இந்த அறிவிப்பு வெளியானவுடன் லாகூர், கராச்சி, இஸ்லாமாபாத் போன்ற முக்கிய நகரங்களில் உள்ள பெட்ரோல் பங்குகளில் மக்கள் கூட்டம் அலைமோதியது. கிலோமீட்டர் கணக்கில் வாகனங்கள் வரிசையில் நின்றன.

பல இடங்களில் பெட்ரோல் பங்க் உரிமையாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையே மோதல்கள் வெடித்தன. சில பங்குகளில் பெட்ரோல் இல்லை என்று மூடப்பட்டதால் பதற்றம் நிலவியது.

மேலும், எரிபொருள் தட்டுப்பாட்டைக் குறைக்க ஊழியர்களுக்கு Work From Home முறையை அமல்படுத்துவது குறித்தும் பாகிஸ்தான் அரசு ஆலோசித்து வருகிறது.

மறுபுறம், ஆப்கானிஸ்தான் உடனான மோதல் பாகிஸ்தான் எல்லைப் பகுதிகளில் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

இதற்கிடையே பிற ஆசிய நாடுகளிலும் இங்கிலாந்து உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளிலும் பெட்ரோல் டீசல் பங்குகளில் இருப்பு உள்ளபோதே வாங்கி வைக்க மக்களை படையெடுத்த வண்ணம் உள்ளனர்.

இந்தியாவில் பெட்ரோல் டீசல் விலை தற்சமயம் உயரவில்லை என்றாலும் மக்கள் பீதியடைந்துள்ளனர்.

சென்னையில் 1 லிட்டர் பெட்ரோல் ரூ.100.80 க்கும் ஒரு லிட்டர் டீசல் ரூ.92.61 க்கும் விற்பனையாகி வருகிறது.

மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி, "இந்தியாவில் எரிசக்தி தட்டுப்பாடு எதுவும் இல்லை, எரிபொருள் விநியோகம் தடையின்றித் தொடரும்" என்று உறுதியளித்துள்ளார்.

பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு நிலவுவதாக வரும் செய்திகள் வதந்தி என இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் மறுத்துள்ளது.

இதற்கிடையே நேற்று நள்ளிரவு நாடு முழுவதும் 14.2 கிலோ வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டர் விலை ரூ.60 உயர்த்தப்பட்டுள்ளது. சென்னையில் 14.2 கிலோ வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டர் ரூ. 928.50 க்கு விற்கப்படுகிறது. அதேபோல வணிக பயன்பாட்டுக்கான சமையல் சிலிண்டர் விலை ரூ.115 உயர்ந்துள்ளது.

# மகளிர் தினத்தில் தேர்தல் வாக்குறுதிகளை வெளியிடும் விஜய்!

மாமல்லபுரம், மார்ச். 07–

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, நாளை (8–ந்தேதி) தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் தமிழக வெற்றிக் கழகம் கட்சி சார்பில் மகளிர் தின விழா கொண்டாட்டங்கள் நடைபெறும் என அக்கட்சியின் பொதுச்செயலாளர் என்.ஆனந்த் அறிவித்துள்ளார். இந்நிலையில் த.வெ.க. தலைவர் விஜய் தலைமையில் (சனிக்கிழமை) மாலை 3 மணியளவில் மாமல்லபுரத்தில் மகளிர் தின விழா கொண்டாடப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விழாவில் பங்கேற்பதற்கான அனுமதிச் சீட்டு இல்லாத கட்சியினரும், மக்களும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கட்சியின் பொதுச்செயலாளர் என். ஆனந்த் வெளியிட்டிருந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்ததாவது:– சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, தமிழக வெற்றிக் கழகம் சார்பில், கழகத் தலைவர்



விஜய் பங்கேற்கும் மகளிர் தின விழா சனிக்கிழமை மாலை 3 மணி முதல் 5 மணி வரை மாமல்லபுரம் போர் பாயிண்ட்ஸ் பை ஷெரட்டன் ஓட்டலில் நடைபெற உள்ளது. இந்த மகளிர் தின விழாவில், சட்டமன்றத் தேர்தல் வாக்குறுதிகளின் ஒரு பகுதியாக, தமிழக வெற்றிக் கழகத்தின் மகளிருக்கான திட்டங்கள் குறித்துக் விஜய் அறிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள இருப்பவர்களுக்கு QR குறியீட்டுடன் கூடிய நுழைவு அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டுள்ளது. இந்த அனுமதிச் சீட்டு பெற்றிருப்பவர்களைத் தவிர்த்து வேறு யாருக்கும் நிகழ்ச்சியில் பங்கேற்க அனுமதி இல்லை. அனுமதிச் சீட்டு இல்லாத கழகத் தோழர்களும் பொதுமக்களும் அனுமதிக்கப்பட மாட்டார்கள். எனவே அவர்கள் இந்த நிகழ்ச்சியைத் தொலைக்காட்சி நேரலைகளில் கண்டு, QR குறியீடு அனுமதிச் சீட்டு பெற்றிருப்பவர்கள் மட்டுமே பங்கேற்க முழு ஒத்துழைப்பு தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் வரும் 8ஆம் தேதியன்று, (ஞாயிறு கிழமை) கழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மகளிர் தின விழா கொண்டாடப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். இவ்வாறு அவர் தெரிவித்திருந்தார்.


## தேவை

தமிழகத்தில் இயங்கி வரும் பிரபல தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழுக்கு, தமிழகம் முழுவதும் துடிப்பும், ஆர்வமும் மிக்க இளைஞர்கள் செய்திகள் சேகரிக்க மற்றும் புகைப்படம் எடுக்க தேவை.

தொடர்புக்கு:

செல் : 7904806432

போன்: 0452 – 4916699


Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020